நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 23 | [06-05-93] | வியாழக்கிழமை | ஓசை 77

## யாழ்-வன்னி தொடர்பு சேவை நடைமுறை விபரங்கள் அறிவிப்பு

நெருக்கடிகால யாழ்-வன்னிதொடர்புச் சேவைக்கான நடைமுறை விபரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பின் முழுவிபரமும் வருமாறு; இச்சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னையகாப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடத்தில்), கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கும். செயலகங்கள் காலை 9-00மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணிவரையும், மாலை 01-30 மணி தொடக்கம் 5-00 மணிவரையும் இயங்கும். வாரத்தில் ஏழு நாட்களும் மேற்குறிப்பிட்ட நேர [4ஆம் பக்கம் பார்க்க]

# பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றம்

## தலைநகரில் பதற்றம் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இன்று தமிழருக்கு எதிரான பெரும் கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் வெளியேறி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறவுள்ளதால் தலைநகர் கொழும்பில் பதற்றநிலை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன,

ஜனாதிபதி பிரேமதாசாவின இறுதிக்கிரிகைகள் இன்று நடைபெறவுள்ள நிலையில் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பதற்ற நிலை அதிகரித்து வருவதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து இனக்கலவரம் வெடிக்கும் என்ற அச்சத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் கொழும்பிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் அவ்வாறு வெளியேறியவர்களில் சுமார் 5000 பேர்வரையில் வவுனியா வந்தடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும் வாழைத்தோட்டம், கொட்டாஞ்சேனை, குணசிங்கபுர, புறக்கோட்டைப் பகுதியில் உள்ள தமிழர்களே வெளியேறி உள்ளதாகவும். சிங்களக் காடையர்களின் மிரட்டலுக்கு உட்பட்டே இவர்கள் வெளியேறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தலைமையில் மாநாடு; தமிழரை தாக்க இரகசியத் திட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா முக்கிய அமைச்சர் ஒருவரின் வீட்டில் தமிழர் மீது தாக்குதல் நடாத்துவது குறித்து ஆராய ஓர் இரகசியக் கூட்டம் நடைபெற்றுள்ளதாக லக்திவ செய்தியாளர் தர்மசிறி காரியவாசம் தெரிவித்துள்ளார்.

இங்கு கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வசிக்கும் தமிழர்கள் மீதான தாக்குதல் குறித்து திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டம் நடைபெற்றதற்கான சகல ஆதாரங்களும் தம்மிடமுள்ளதாகவும்,

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி அமைதியைப் பேணுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கும் அதேவேளை இவ்வாறான இரகசியக் கூட்டங்

## வன்முறையில்ஈடுபடுவதற்கு

## செய்தியாளரை தாக்க வன்முறையாளர் திட்டம்

### பத்திரிகையாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் இறுதி ஊர்வலத்தின் போது செய்தியாளர், புகைப்படப்பிடிப்பாளர், பத்திரிகை நிறுவனங்களைத் தாக்க சில வன்முறையாளர் திட்டமிட்டிருப்பதாகவும் எனவே இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறும் சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தின் போது அரச சார்புள்ள பத்திரிகை நிறுவனம், செய்தியாளர், வெளியீட்டாளர், புகைப் படப்பிடிப்பாளர் ஆகியோர் தாக்கப்பட்டதை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும், இதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக அரச வன்முறையாளர் திட்டம் தீட்டியிருப்பதாகவும், எனவே இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அச்சங்கம் மேலும் வேண்டுகோள் விடுத்தது.

## வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு விசேட பாதுகாப்பு

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு இறுதி மரியாதை செலுத்த வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவ பொலிசாரும், விசேட பாதுகாப்புபடைப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினரும், விசேடகொமாண்டோ பிரிவை சேர்ந்தவர்களும்ஒன்றிநிதியும் தனது பாதுகாப்பு குறித்து அஞ்சத்தேவையில்லை என மேலும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

## பூரண பாதுகாப்பு தமிழருக்கு வழங்கப்படும்

### பதில் ஜனாதிபதி உறுதி

கொழும்பில் வாழும் தமிழரின் பாதுகாப்பிற்கென வெளி மாவட்டங்களிலிருந்து பொலிசாரும், இராணுவத்தினரும்

பதில் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி பூநகரி–படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## வீரச்சாவு

### 2-ம் லெப்டினன்ட் அருள்மதனி

04-05-1993 அன்று யாழ். மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவை அடைந்த 2-ம் லெப்டினன்ட் - அருள்மதனி, தச்சினாமூர்த்தி - ரத்தினேஸ்வரி வடலியடைப்பு பண்டத்தரிப்பு எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வங்கிகளுக்கு பணம்

யாழ்.வங்கிகளுக்கு'வாதுவ' கப்பலில் பணம் எடுத்துவரப் பட்டது. நேற்று காலை பருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்த இக்கப்பலில் வங்கிகளுக்கு 4 கோடி பணம் வந்தது.

இலங்கைவங்கிக்கு 2 கோடி, மக்கள் வங்கிக்கு 2 கோடி பணம் எடுத்துவரப்பட்டுவங்கி உத்தியோகத்தர்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

இக்கப்பலில் 2,700 மெட்றிக் தொன் மா எடுத்துவரப்பட்டது. இன்று மா இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும்.

நடைபெறவுள்ள நிலையில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பதற்ற நிலை அதிகரித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

என்ற அச்சத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் கொழும்பிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் அவ்வாறு வெளியேறியவர்களில் சுமார்

வல்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும் வாழைத்தோட்டம், கொட்டாஞ்சேனை, குணசிங்கபுர, புறக்கோட்டைப் பகுதியில் உள்ள

களின் மிரட்டலுக்கு உட்பட்டே இவர்கள் வெளியேறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் தலைமையில் மாநாடு; தமிழரை தாக்க இரகசியத் திட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா முக்கிய அமைச்சர் ஒருவரின் வீட்டில் தமிழர் மீது தாக்குதல் நடாத்துவது குறித்து ஆராய ஓர் இரகசியக் கூட்டம் நடைபெற்றுள்ளதாக லக்திவ செய்தியாளர் தர்மசிறி காரியவாசம் தெரிவித்துள்ளார்.

இங்கு கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வசிக்கும் தமிழர்கள் மீதான தாக்குதல் குறித்து திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டம் நடைபெற்றதற்கான சகல ஆதாரங்களும் தம்மிடமுள்ளதாகவும்,

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி அமைதியைப் பேணுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கும் அதேவேளை இவ்வாறான இரகசியக் கூட்டங்களை நடாத்தி மக்களைத் தாக்கத் திட்டமிடுவது வேதனைக்குரிய விடயம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வன்முறையில் ஈடுபடுவதற்கு சிங்களக் குழுக்கள் முயற்சி

## அமைச்சர் கூரே தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்த சில தீய குழுக்கள் திட்டம் தீட்டியுள்ளதாக தமக்கு தகவல்கள் கிடைத்ததாக பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் சிறிசேனகுரே தெரிவித்தார்.

அப்பாவி மக்களைத் தாக்கி மீண்டும் ஒரு வன்முறை ஏற்படுத்த இக்குழுக்கள் விரும்புவதாகவும் இதற்கு மக்கள் உடந்தையாக இருக்கக்கூடாது என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

உலக தலைவர்களின் அனுதாபம் எம்மீது இருக்கும் போது இவ்வாறான வன்முறைகள் அந்தஅனுதாபத்தை அழித்து விடும் எனவே நாம் அவதானமாக இருக்க வேண்டும் என்று மேலும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தீய சக்திகளினதும் வன்முறையாளர்களினதும் வீண் வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் இதுவே மறைந்த ஜனாதிபதிக்கு செய்யும் பெரிய அஞ்சலியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# பிரேமா கொலை விவகாரம் விசாரணையில் 200பேர்

ஆமர் வீதியில் இருக்கும் வீடொன்றில் வைத்து தற்கொலைப்படை வீரரின் உடம்பில் குண்டு கட்டப்பட்டதாகவும், இக்குண்டு பொருத்தப்படுவதற்கு குறைந்தது இரண்டு பேராவது உதவி இருக்க வேண்டுமெனவும், குண்டுதட்டையானதாக இருக்கலாம் எனவும் பொலிசார் கூறியுள்ளனர். எனவே இப்பகுதியில் இருக்கும் வீடுகள் பலவும் பொலிசாரால் சோதனையிடப்பட்டு வருவதாகவும், ஆமர் வீதி, குணசிங்கபுர வாழைத்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் இருநூறு பேர் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

அத்துடன் இத்தற்கொலைப் படைவீரர் குண்டுகளுக்கு மேலாக பச்சைநிற 'சேர்ட்' ஒன்றை அணிந்திருந்ததாகவும் அதற்கும் மேலாக பச்சைநிறச் சால்வை ஒன்றை அணிந்திருந்ததாகவும் பொலிசார் கூறுகின்றனர். அவர் தனது கமக்கட்டுப் பகுதியினால் அமுக்கியே குண்டை வெடிக்க வைத்திருக்கலாம் எனவும் பொலிசார் கருதுகின்றனர்.

# 45 தமிழ் இளைஞர்கள் இரண்டு தினங்களில் கைது

## கொழும்பில் சுற்றி வளைப்பு; தேடுதல்

(கொழும்பு)

கொழும்பில் சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையைத்தொடர்ந்து பல தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யபபட்டுள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்று மட்டும் சுமார் 30க்கும் மேற்பட்ட தமிழர் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் வெள்ளவத்தை ஹோட்டல் ஒன்றிலிருந்தும் ஏனைய பகுதிகளில் இருந்தும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் 14 தமிழர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது பல வீடுகள் தொடர்ந்தும் சோதனையிடப்பட்டும் சில பகுதிகள் சுற்றி வளைக்கப் பட்டும் தேடுதல் தொடர்வதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

# பிரேமதாசா இறுதி ஊர்வலம் 11 மணிக்கு ஆரம்பம்

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதி ஊர்வலம் இன்று காலை 11.00 மணிக்கு ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஆரம்பமாகும். பிரேதப் பேழை அலக்ஸாந்திரியா பிளேஸ் சந்தியில் வைத்து ஆயுதப் படைகளால் பொறுப்பேற்கப்படும். பிரேதப் பேழை பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு இறுதி ஊர்வலம் சுதந்திர சதுக்கம் நோக்கி செல்லும் சுதந்திர சதுக்கத்தில் விசேட மேடையில் பிரேதப் பேழை வைக்கப்பட்டு மத அனுட்டானங்கள் நடத்தப்படும்.

வெளிநாட்டுத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் பிரமுகர்களின் இரங்கலுரையைத் தொடர்ந்து மாலையில்பிரேமதாசாவின் சிதைக்கு தீமூட்டப்படும்.

# கலவரத்தைத் தடுக்க வெள்ளியன்று விடுமுறை?

[கொழும்பு]

கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சநிலை ஏற்பட்டமையே வெள்ளிக்கிழமையை விடுமுறை தினமாக அரசு அறிவித்தமைக்கு காரணம் என பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார். விடுமுறை அறிவிப்பால் மக்கள் நகரில் கூடுவதை தடுக்க முடியும் என அரசு கருதுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் பிரேமதாசாவின் மரணச்சடங்கிற்கு பின்னர் கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கலாம் என்று தமிழ் எம். பியொருவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

# மாத்தறைப் பகுதியில் பிக்குவின் சடலம் மீட்பு

(கொழும்பு)

மாத்தறைப் பகுதியில் சடலம் ஒன்றும் அதன் அருகே காவி உடையொன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சடலத்துடன் புத்தசாசன அமைச்சு வழங்கிய அடையாள அட்டையொன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும். அதனைத் தொடர்ந்து சடலம்ஒருபிக்குவினுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப் படுவதாகவும் பி.பி.சி. தெரிவித்தது

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையை அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கோல்கொட சுதந்திரக்கட்சி மகளிர் பிரிவுச் செயலாளர் மங்களா ஜெயவிக்கிரமை மிரட்டிய சிலர் அவரது கூந்தலை வாளால் வெட்டிக் கொண்டு சென்றுவிட்டதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# நேற்று மரணச் சடங்குகள்

ஆமர் வீதி குண்டு வெடிப்பில் பலியான பிரதி பொலிஸ் மா அதிபர் ரொணி குணதிலக உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்களின் மரணச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

# இலங்கை அரசியலில் ஆயுதக் கலாசாரம்

(கொழும்பு)

இலங்கையின் அரசியலில் ஆயுதக் கலாசாரம் புகுந்து விட்டது. வெடிகுண்டையும், துப்பாக்கி ரவைகளையும் நோக்கியே இலங்கையின் அரசியல் சென்றுகொண்டிருப்பதாக பிரேமதாசாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பலர் கருத்து வெளியிட்டனர்.

இவ்வாறு ஆயுதக்கலாசாரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் அரசியலை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

காப்பு வழங்குமாறும் சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

லலித் அத்துலத் முதலியின்

வடிக்கையாக அரச வன்முறையாளர் திட்டம் தீட்டியிருப்பதாகவும், எனவே இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அச்சங்கம் மேலும் வேண்டுகோள் விடுத்தது.

# வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு விசேட பாதுகாப்பு

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு இறுதி மரியாதை செலுத்த வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவ பொலிசாரும், விசேட பாதுகாப்பு படைபிரிவை சேர்ந்த இராணுவத்தினரும், விசேடகொமாண்டோ பிரிவை சேர்ந்தவர்களும் ஒன்றிணைந்து அதி உயர் பாதுகாப்பை தாம் மேற்கொண்டு இருப்பதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

எந்த ஒரு வெளிநாட்டுபிரதிநிதியும் தனது பாதுகாப்பு குறித்து அஞ்சத்தேவையில்லை என மேலும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

யாழ் வங்கிகளுக்கு 'வாதுவ' கப்பலில் பணம் எடுத்துவரப்பட்டது. நேற்று காலை பருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்த இக்கப்பலில் வங்கிகளுக்கு 4 கோடி பணம் வந்தது.

இலங்கைவங்கிக்கு 2 கோடி, மக்கள் வங்கிக்கு 2 கோடி பணம் எடுத்துவரப்பட்டுவங்கி உத்தியோகத்தர்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

இக்கப்பலில் 2,700 மெட்றிக் தொன் மா எடுத்துவரப்பட்டது. இன்று மா இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும்.

# பூரண பாதுகாப்பு தமிழருக்கு வழங்கப்படும்

## பதில் ஜனாதிபதி உறுதி

கொழும்பில் வாழும் தமிழரின் பாதுகாப்பிற்கென வெளி மாவட்டங்களிலிருந்து பொலிசாரும், இராணுவத்தினரும் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தமிழருக்குப் பூரண பாதுகாப்பை வழங்குவர் என தாம் நம்புவதாகவும் சிறிலங்கா பதில் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால்தமிழ்மக்கள் தமது பாதுகாப்பு குறித்து அஞ்சத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். குறிப்பிட்டசில பகுதிகளின் பாதுகாப்பிற்கு விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களுக்கு மக்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்தப் பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மோசமான செய்திகள், வதந்திகளைப் பரப்பி பதற்றத்தையும், கலவரத்தையும் ஏறபடுத்த சிலர் முயல்வதாகவும் நேற்று அலரி மாளிகையில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி பதவிக்கு விஜயதுங்காவே பொருத்தம்

## ஜே. ஆர். தெரிவிப்பு

நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் டி. பி. விஜயதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கு வழி செய்கிறது. அத்துடன் கட்சியும் (யு. என் பி.) விஜயதுங்க ஜனாதிபதியாவதை விரும்புகிறது என்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

விஜயதுங்கதான் இந்நேரத்தில் ஜனாதிபதியாக நியமனம் பெறுவதற்குப்பொருத்தமானவர் பாராளுமன்றம் தெரிவு செய்யும்போது ஜனாதிபதியாக இருப்பதற்கான பொருத்தப்பாடும், அங்கீகாரமும் அவருக்குக் கிடைக்கிறது என்று ஜே. ஆர். மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியை கொலை செய்தவர்கள்;

# புலிகள் என நிரூபிக்க பொலிசார் பெரு முயற்சி

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகள் தான் என்ற தமது முடிவை நிலைநாட்டும் வழிவகைகளைக் கண்டு பிடிப்பதிலேயே பொலிசார் ஈடுபட்டுள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது.

மேலும் தற்கொலைப்படை வீரர் தமிழிளைஞர் ஒருவரே என 'ஈவினிங்ஒப்சேபர்' செய்தி வெளியிட்டுள்ளது இது குறித்து கருத்து தெரிவித்த பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க விசாரணையில் இருக்கும் விடயம் குறித்து தாம் கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது என்றார்.

## அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறை

(கொழும்பு)

நாளை வெள்ளிக்கிழமையும் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில்நாடு முழுவதும் அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறையாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது. இதேவேளை சகல தொழில்நிறுவனங்களும் தமது

[4ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கசற் றேடியோக்களா! கடிகாரமா!!

உங்கள் கடிகாரங்களையும் றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6541)

### உடன் விற்பனைக்குண்டு

கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்கு உண்டு 'மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (4819)


### பொதுக் கூட்டம்

வடமாகாண ஆசிரியர்சகாய நிதிச் சங்க 59ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிறு காலை 10 மணிக்கு வைத்தீஸ்வர கல்லூரி மண்டபத்தில் திரு. அ. ஜெயராஜன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அத்தருணம் இடம்பெயர்ந்துள்ள ஆசிரிய உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு செயலர் திரு. வி. ஸ்ரீ சக்திவேல் அவர்கள் அறிவிக்கின்றார்.

### மாட்டுவண்டில் சவாரி

யாழ் மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி எதிர்வரும் ஒன்பதாம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நீர்வேலி சவாரி மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது. போட்டிகள் ஏ, பி, சி என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும். மேலதிக விபரங்களுக்கு யாழ் மாவட்டச் செயலகம், கோண்டாவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (76)

### சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆஸ்மா (தொய்வு) நோயால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்துள்ளது.

1992ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் 5.780 பேர் ஆஸ்மா நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கூடுத

## பிரதேச சபை வாரியாக கோட்டக்கல்வி அலுவலகம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் புதியதிட்டத்தின்படி கோட்டக்கல்விப் பிரிவுகளுக்கு பதிலாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச கோட்டக்கல்வி பிரிவுகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இதன்படி நாடெங்கிலுமுள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒவ்வொரு பிரதேச கோட்டக் கல்வி அலுவலகங்கள் இயங்கவிருக்கின்றன.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு (மண்முனை) ஆரைப்பற்றை, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, ஏறாவூர், செங்கலடி வாழைச்சேனை, வாகரை, வவுனதீவு ஆகிய பத்து பிரதேச கோட்டக்கல்விப்பிரிவுகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது. (பா)

## ஆட்சியைக் கைப்பற்ற இராணுவத்தால் முடியாது

தற்போதையநிலையில் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய வலிமை இராணுவத்திற்கு இல்லை எனச் சிங்களப் பத்திரிகையாளர் ஐவன் தெரிவித்துள்ளார்.

பிளவுகள் கருத்துவேறுபாடுகள் என்பவற்றுடன் அராலித்துறைக் கண்ணிவெடியில் கொல்லப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மறைவும் இதற்குக் காரணம் என மேலும் அவர் தெரிவித்தார்.

## சர்வாதிகார போக்கே இன்றைய நிலைக்கு காரணம்

(கொழும்பு)

தனது கட்சியில் ஒருவரை யாவது முன்னே வர இடம் கொடுக்கவில்லை. தானே கடசியில் ஒரு சர்வாதிகாரி போல் திகழ்ந்தார். இதனாலே இன்று ஐ. தே. க. ஒரு தலைவரை தெரிவு செய்ய முடியாது உள்ளது என சமசமாஜ கட்சி தலைவர் பேனாட் சொய்சா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த சர்வாதிகாரம் கடசிக்கும் -ஏன் நாட்டிற்கும்கூட சிறந்த ஒரு ஸ்திரமான ஆட்சி அமைய விடாது தடுத்துவிட்டது கட்சியில் உள்ள திறமையானவர்களை கூட திட்டமிட்டு பிரேமதாசா வெளியேற்றினார் என்று அவர் மேலும் கூறினார்.


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

95 பிரிவு 2 ஆரம்பமாகிவிட்டன

[சனி, ஞாயிறு]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் | 10-11 |
| வர்த்தகம் | — திரு தேவா | 1-2 |
| கணக்கியல் | — திரு S K. பிரபாகரன் | 12-1 |
| அளவையியல் | — திரு. விக்கி | 9-10 |
| தமிழ் | — திரு. குழந்தை | 4-5 |
| இந்து நாகரிகம்) இந்து சமயம் ) | — திரு. காரை சுந்தரம்பிள்ளை | 1-2 10 11 |
| புவியியல் | — திரு. குணராஜா | 11-12 |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் | 9-10 |
| வரலாறு | — திரு. சிறீதரன் | 1-2 |

✔ 95ஆம் ஆண்டுக்கு இவ்வருடம் பிரிவு III மட்டுமே ஆரம்பமாகும்.


## வடபகுதி உப்பள ஊழியர்கள் சம்பளக் கொடுப்பனவு

வடபகுதி உப்பள ஊழியர்களின் 1992ம் ஆண்டிற்கான சம்பளப் பணம் திறைசேரியினால் வழங்கப்பட்டுவிட்டதாக உப்புக் கூட்டுத்தாபன உற்பத்தி முகாமையாளர் சிறி இராமநாதன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்திக் குறிப்பில் மேலும் இச் சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக கலந்தாலோசிக்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரையும் மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு சமுகம் அளிக்கும் படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


வாடிக்கையாளருக்கு

## அறிவித்தல்

ஜோ. எகட்டன் ஜெசித்தாராவின் உணவுப் பார்சல்கள் தாமதமின்றி உடனடியாகக் கிடைக்கும்

பகல் 11-30 மணிமுதல் 3-30மணி வரை எல்லா உணவு வகை ஓடர்களும் துரித கதியில் கவனிக்கப்படும்.

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) சுண்டுக்குளி.

(சி/6569)


### ஈழகேசரி பொன்னையா 42வது நினைவு தினம்

ஈழகேசரி. நா. பொன்னையா நாற்பத்திரண்டாவது நினைவுதினம் எதிர்வரும் ஞாயிறன்று காலை ஒன்பது மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது. இங்கு ஈழகேசரியும் குழந்தை இலக்கியமும் என்னும் பொருள்பற்றி யாழ்பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் உரையாற்றவுள்ளார். அத்துடன் இரசிகமணியின் சிறுவர் கவிநயம் என்னும் நூல் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை. இரத்தினதுரை அவர்களால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இந்நூலின் ஆய்வுரையை கல்வயல் வே. குமாரசாமி அவர்கள் ஆற்றவுள்ளார்.


## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வல்லவர்கள் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம்: 186

மே/பா. ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(4826)


ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## வாக்காளர் பட்டியல்

31-03-93

எமது சங்கத்தின் 31-03-93 வரையிலான வாக்காளர் பட்டியல்கள் கிளைகள்-1, 2, 3, 5, 13க்கு உரியவை, கிளைகள் 4, 6, 9, 12க்கு உரியவை கிளைகள்-7 8, 10, 11க்கு உரியவை முறையே பண்ணைவீதியில் தற்போது அமைந்துள்ள கிளை-1, கிளை 2, கிளை-3, ஆகியவற்றில் அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் 25-05-93-ம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ ''செயலாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், பி.எஸ் சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## முகாமிலிருந்து வெளியேற தமிழக பொலிஸார் தடை

தமிழகத்தில் முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களை விட்டு வெளியே செல்வதற்கு தமிழகப் பொலிசார் தடை விதித்துள்ளனர். அத்துடன் சகல முகாம்களிலும் கண்காணிப்பு ஏற்பாடுகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

### உடற்கல்வி பயில்நெறி

யாழ்ப்பாணகல்வித்திணைக்கள உடற்கல்விப் பிரிவினரால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உடற் கல்விப் பயில்நெறி ஒன்று நடாத்தப்படவுள்ளது. இப் பயில்நெறியில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் யாவரும் தவறாது கலந்து கொள்ளும்படி உதவிக் கல்விப்பணிப்பாளர் அருணகிரிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

1993 மேமாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி பாடநெறி இறுதிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட நேர அட்டவணை காலக்கிரமத்தில் அறியப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மண்டபம் அமைப்பு

(தென்மராட்சி)

யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்திற்கு புனர்வாழ்வு அமைச்சுவழங்கியநிதியுடனும் அவ்வூர் மக்களின் நிதி உதவியுடனும் பாடசாலைக்கு பெரிய அளவிலான கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இடம்பெயர்ந்து மந்துவில் பகுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் பெரும் நன்மை அடைந்துள்ளார்கள். அத்தோடு இப்பாடசாலையில் இருந்த இடப்பற்றாக் குறை நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (86)

### பாராட்டுபத்திரம் வழங்கப்பட்டது

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்பு அலகில் புகைப்படக்கலையின் பிரிவு III இற்கான பயிற்சி வகுப்பு கடந்த 2-5-93இல் முடிவுற்றது இதில் 100 மாணவர்கள் கல்விகற்று வெளியேறியுள்ளார்கள்.

இப்பயிற்சி நெறியின்நிறைவு விழாவும் பாராட்டு பத்திரம் வழங்குதல் வைபவமும்கடந்த 2ந்திகதி ஞாயிற்றுக்கிழமைபல்கலைக்கழகபுறநிலைப் படிப்பு அலகின் இணைப்பாளர் திரு. எஸ். சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது. பாராட்டுப்பத்திரங்களை யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வழங்கினார். மாணவர் சார்பில் பொ. இராசேஸ்வரன், எஸ். மகேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர் (86)

### வருடாந்த விளையாட்டு போட்டி

அரியாலை திருமகள் பாலர் பாடசாலையினர் நடத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. சிறார்கள் கலந்துகொள்ளும் போட்டிகளுடன், பழைய மாணவர்களுக்கான போட்டிகளும், வினோத உடைப்போட்டிகளும் இங்கு இடம்பெறவுள்ளன.

### ஜனாதிபதி மாளிகைக்கு

ஜனாதிபதியின் பூதவுடல் தாங்கியபேழை கடந்ததிங்கட்கிழமைஇரவு அவரின்சுச்சரித்த இல்லத்திலிருந்து ஜனாதிபதி மாளிகைக்குக் கொண்டுவரப்பட்டது.


வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்

உயர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களுக்கு

## "மணி விழா"

காலம் : 1993.05.07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

நேரம் : பிற்பகல் 5.30 மணி

இடம்: இணுவில் கந்தசுவாமி கோயில்

தலைவர்: கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

சமயப்பெரியோர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் ஆகியோரின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது. போட்டிகள் ஏ, பி, சி என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும். மேலதிக விபரங்களுக்கு யாழ் மாவட்டச் செயலகம், கோண்டாவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (76)

## சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆஸ்மா (தொய்வு) நோயால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்துள்ளது.

1992ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் 5.780 பேர் ஆஸ்மா நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கூடுதலானோரைப் பீடித்துள்ள நோய்களில் இதுவும் ஒன்றாகும். (42)

## 2 ஆரம்பமாகிவிட்டன

[சனி, ஞாயிறு]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் | 10-11 |
| வர்த்தகம் | — திரு தேவா | 1-2 |
| கணக்கியல் | — திரு S K. பிரபாகரன் | 12-1 |
| அளவையியல் | — திரு. விக்கி | 9-10 |
| தமிழ் | — திரு. குழந்தை | 4-5 |
| இந்து நா ரிகம்) | — திரு. காரை சுந்தரம்பிள்ளை | 1-2 |
| இந்து சமயம் ) | | 10 11 |
| புவியியல் | — திரு. குணராஜா | 11-12 |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் | 9-10 |
| வரலாறு | — திரு. சிறீதரன் | 1-2 |

95ஆம் ஆண்டுக்கு இவ்வருடம் பிரிவு III மட்டுமே ஆரம்பமாகும்.

★ அனுமதிகளுக்கு முந்துங்கள்

(சி-6557)

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(4826)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## வாக்காளர் பட்டியல்

### 31-03-93

எமது சங்கத்தின் 31-03-93 வரையிலான வாக்காளர் பட்டியல்கள் கிளைகள்-1. 2, 3, 5, 13க்கு உரியவை, கிளைகள் 4, 6. 9, 12க்கு உரியவை கிளைகள்-7 8, 10, 11க்கு உரியவை முறையே பண்ணைவீதியில் தற்போது அமைந்துள்ள கிளை-1, கிளை 2, கிளை-3, ஆகியவற்றில் அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் 25-05-93-ம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ ''செயலாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், பி.எஸ் சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர் (சி/6570) தலைவர்

இதனால் இடம்பெயர்ந்து மந்துவில் பகுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் பெரும் நன்மை அடைந்துள்ளார்கள். அத்தோடு இப்பாடசாலையில் இருந்த இடப்பற்றாக் குறை நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (86)

## ஜனாதிபதி மாளிகைக்கு

ஜனாதிபதியின் பூதவுடல் தாங்கியபேழை கடந்ததிங்கட்கிழமைஇரவு அவரின்சுச்சரித்த இல்லத்திலிருந்து ஜனாதிபதி மாளிகைக்குக் கொண்டுவரப்பட்டது.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்

உயர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களுக்கு

## "மணி விழா"

காலம் : 1993.05.07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

நேரம் : பிற்பகல் 5.30 மணி

இடம்: இணுவில் கந்தசுவாமி கோயில்

தலைவர்: கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

சமயப்பெரியோர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் ஆகியோரின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில்.

செ. சோதிப்பெருமாள்
செயலாளர்
விழாக்குழுவினர் சார்பாக.

குறிப்பு : பிற்பகல் 4.00 மணிக்கு ஊர்வலம் இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் இருந்து ஆரம்பமாகும்.

(4825)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மைதான அபிவிருத்தி நிதிக்காக

## இன்று 06. 05. 1993 வியாழன் இரவு 7. 00 மணி

## அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில்

(இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு.)

அல்வாய் மனோகர கான சபா வழங்கும்

### T. கலாமணியின்

### பூதத்தம்பி

(வரலாற்று இசை நாடகம்)

அரியாலை கலைமகள் கலையகம் வழங்கும்

### T. பாபுவின்

### போவோமா ஜெமலோகம்

(முழுநீள நகைச்சுவை நாடகம்)

அரியாலை கலைமகள் கலைஒளி நாடகமன்றத்தின்

**2-வது பிரமாண்டமான தயாரிப்பு**

"இந்தமண் எங்களின் சொந்தமண்" புகழ்

**S. G சாந்தன்** சத்தியவானாகவும்

அரியாலையூர் நடிக கலாமணி

**V. செல்வம்** சாவித்திரியாகவும்

**இணைந்து வழங்கும்**



# சத்தியவான் சாவித்திரி

புராண இசை நாடகம்

**பிரவேசம் ரூபா: 10-00, 15-00**

(4823)

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-05-06

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கோயில் போரதீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

2-ம் லெப். வாமதேவன்/மம்பட்டியான்
(பூபாலபிள்ளை பிரதீஸ்வரன், மண்டூர்- மட்டு.)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

ஜீவன் (கணபதிப்பிள்ளை செந்தில்ராஜ் - தேவிபுரம், முறக்கொட்டாஞ்சேனை - மட்டு.)

மட்டு - கொம்மாதுறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கபில் (இராசரட்ணம் சிவகுமார் - கொம்மாதுறை- மட்டு.)

மானாண்டான் குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

லெப். உத்தமன் (வேலாயுதம் குபேந்திரன் - 12-ம் கட்டை, இறக்கண்டி-திருமலை)

மட்டு - பெரியபுல்லுமலை, வெளிச்சாண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு அதிர்ச்சி காரணமாக எமைப் பிரிந்த-

மரகதம் (சாரதாதேவி ஏரம்பமூர்த்தி -அல்வாய் மேற்கு பருத்தித்துறை - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6567)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

நீதியைப் போலவே, இரக்கமும் ஒரு சட்டம் என்றும், நேர்மை போலவே கருணையும் ஒரு கடமை என்றும் நான் நம்புகிறேன்.

- விக்டர் ஹ்யூபோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## பரிகாரம் தேவை

உலகில் 'கெடுபிடிப் போர்' நிகழ்ந்து கொண்டிருந்த வேளை, ஒரு நாட்டில் ஒரு விபத்தோ அன்றி நாசகார வேலைகளோ இடம்பெற்றால் அதற்கு எதிரணியினரைக் குற்றம் சாட்டுவதே வழமையானதொன்றாக இருந்தது. அதன் பிறகே விசாரணை. விசாரணையும் எதிரணியினர் மீது குற்றம் சாட்டும் நோக்கம் கொண்டே நடைபெறுவது வழமையாகும்.

அதாவது"விபத்தோ, அழிவு வேலையோ சோவியத் ருசியவிலோ, ஆதரவு அணிக்குள்ளோ இடம் பெற்றால் அது சி. ஐ. ஏயின் நாசகார வேலை எனவும், அமெரிக்க அணிக்குள் இடம்பெற்றால் கே. ஜி. பி யின் அழிவு வேலை எனவும் பழிசுமத்தப் பட்டன. இது அணு உலை விபத்துக்களில் இருந்து, ஆட்சிக் கவிழ்ப்புக்கள் வரை இடம்பெற்றது. புவியதிர்ச்சி இடம்பெற்றால் கூட எதிரணியின் சதிவேலை எனக் குற்றம் சாட்டினாலும் ஆச்சரியப்பட முடியாத ஒன்றாகவே இருந்தது.

இதே போலவே இலங்கையிலும் சில வேளை இந்தியாவிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவிலும் இடம்பெற்ற அரசியற் கொலைகளுக்கு விடுதலைப் புலிகள் மீதும் குற்றம் சாட்டப்படுவதுண்டு. இதே வேளை தென்னிலங்கையில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு பிரேமதாசாவே பொறுப்பு என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. ஆனால் ஜனாதிபதிபிரேமதாசாவோசகலதிற்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பு எனக் குற்றம் சாட்டினார்.

ஆனால் லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டபோது சிறிலங்கா ஜனாதிபதியே அதற்கு முழுப் பொறுப்பு என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியபோது பிரேமதாசா விசனத்தின் எல்லைக்கே சென்றார். அவர் ''எதிர்க் கட்சியினர் என்னை இரு கொலைகளில் மட்டுமே சம்பந்தப்படுத்தாமல் விட்டுவிட்டனர். ஒன்று மகாத்மா காந்தியின் கொலை. மற்றையது அண்மையில் தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கிறிஸ் ஹானியின் கொலை'' எனக் {குறிப்பிட்டார்.

ஆனால் இன்று பிரேமதாசாவும் கொல்லப்பட்ட நிலையில், அவரது கொலையும் சேர்ந்து

# தீபேத்தின் அடையாளம் சீனாவினால் அழிக்கப்படுகிறது

சீனாவின் அதிகாரத்தைக் கம்யூனிஸ்டுகள் 1949 ஆம் ஆண்டில் கைப்பற்றியதைத் தொடர்ந்து தீபேத்துக்குள் ஊடுருவல் மேற்கொள்ளப்பட்டு 40 ஆண்டுகளுக்குக் கூடுதலான காலம் கழிந்து விட்ட இன்றைய நிலையிலும் சீனாவின் ஆட்சியை ஏற்றுக் கொள்ள தீபேத்தியர் மறுத்து வருகின்றனர். பௌத்த குருமார் மீதான அடக்குமுறையிலேயே சீன ஆட்சி கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றது. ஆனால் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஏனைய தீபேத்தியரின் பங்கு பெருகி வருவது குறித்துக் கூடுதலான சிரத்தை காட்டப்படுகிறது. இதன் விளைவு தீபேத்தின் தலைநகரான லாஸாவிலு ள சிறையின் அரசியல் கைதிகளில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் தீபேத்தின் சாதாரண மக்கள் எனக் கூறப்படுகின்றது.

தமது கிராமத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐந்து விவசாயிகளுக்கு கடந்த நவம்பரில் 13 க்கும் 15 க்கும் இடைப்பட்ட ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது என்ற தகவல்கள் மேற்கு நாடுகளை வந்தடைந்துள்ளன. நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை அவதானிக்கும் சுயாதீன தகவல் சேவையான தீபேத் தகவல் சேவையின் கூற்றுப்படி 1990 ஆம் ஆண்டு முதல் அரசியல் குற்றங்களுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடுதலான தண்டனை இதுவாகும்.

கடந்த ஆண்டு கிராமப் பகுதிகளில் 23 எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாக இச்சேவை அறிவித்துள்ளது. இவற்றுக்காகச் சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டனர். இருப்பினும் இந்த ஆர்ப்பாட்டங்களின் குறிக்கோள் மாறாது அப்படியே இருந்து வருகின்றது. சீன ஆட்சிக்கு ஒரு முடிவு அஞ்ஞாத வாசம் மேற்கொண்டுள்ள தீபேத்திய தலைவர் தலாய்லாமா நாட்டுக்கு திரும்பவேண்டும் என்பதே அக்குறிக்கோள். ஆனால் தீபேத்தை குடியேற்ற மயமாக்குவதை தீவிரப்படுத்துவதில் சீனாவுக்குள்ள வளர்ந்து வரும் உறுதிப்பாட்டினால் விளைவதே இந்த ஆர்ப்பாட்டங்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. தீபேத்துக்குள் செல்லுமாறு கம்யூனிஸ்ட்கட்சி அதிகாரிகள் மக்களை கோருகின்றனர். தீபேத்திலுள்ள நிலத்துக்கு நீண்டகால குத்தகையில் சீன மக்கள் முதல் தடவையாக இப்பொழுது கையெழுத்து இடுகின்றனர்.

தீபேத்திலுள்ள எல்லா நகரங்களிலும் பிரதான புதிய குடியிருப்பு கட்டடத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. சீன குடியேற்றக்காரர்களை முன்னர் ஒருபோதும் காணாத ஒதுக்குப்புற கிராமப் பகுதிகளில் கூட இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தீபேத்தின் இரண்டாவது பெரிய நகரமான சிக்கட்ஸீக்கு அருகே தீபேத்திய விவசாயிகளிடம் இருந்து நிலம் வாங்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. தீபேத்தில் வளம் மிக்க பகுதிகளில் ஒன்றான அப்பகுதி ஆயிரக்கணக்கான சீன விவசாயிகளுக்காக தயார் படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

தீபேத்தின் கனிப்பொருள் செல்வம் சீனாவுக்கு கிடைத்துள்ள வெகுமதிகளில் ஒன்று. தீபேத்தை உள்ளடக்கிய தெற்கு. மேற்கு பிராந்தியங்களில் 200 மேற்பட்ட யுரேனியம் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் சீன அரசின் அறிவிப்பின் விபரங்களை 1990ஆம் ஆண்டு மே 28ஆம் திகதி 'சீன தினசரி' யில் வெளியான கட்டுரை வெளியிட்டிருந்தது. சீனர்களினால் பட்டியல் இடப்பட்ட ஏனைய கனிப்பொருள்களிடையே செம்பு, தங்கம், வெள்ளி என்பன அடங்கும். பழைய தீபேத்தின் வடகிழக்கு மாகாணமான குயின்காய் குறிப்பிடத்தக்களவு எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ளது.

தீபேத்தின் அகழ்வு வேலையில் ஈடுபட வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைக்கும் தீவிர பிரசாரம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில ஜப்பானிய கம்பெனிகள் ஏற்கனவே முதலீடு செய்துள்ளன. தாய்வானிலும் ஹொங்கொங்கிலும் உள்ள நிறுவனங்கள் அக்கறை காட்டியுள்ளன.

உல்லாசப் பிரயாணத்துறையும் சீனருக்கு இலாபகரமானதாகலாம். ''ஜம்போஜெட்'' விமானங்கள் தரையிறங்க லாஸா விமான நிலையம் பெருப்பிக்கப்பட்டுள்ளது. 2000 ஆண்டளவில் தீபேத்துக்கு ஆண்டு ஒன்றில் ஓர் இலட்சம் உல்லாசப் பிரயாணிகள் வருவதை சீனஆட்சி எதிர்பார்க்கின்றது.

தீபேத்தை நடத்திச் செல்லும் ஜனத்தொகையில் நான்கு சத வீதத்தினரான - தொழில் தேர்ச்சி பெற்றவர்கள் உள்ளூர் சிறு வியாபாரங்களைக் கூட ஊக்குவிப்பதில்லை. சீனாவில் இருந்து வந்து குவியும் வர்த்தகர்களினாலும் கடைக்காரர்களினாலும் தமது தேவைகள் நிறைவேற்றப்படுவதையே தீபேத்தியர் காணுகின்றனர்.

தீபேத்தை அபிவிருத்தி செய்வதில் உள்ள தமது அவசரத்தில் சுற்றாடலை பாதுகாக்க சிறிதளவு முயற்சியே சீனர்கள் மேற்கொள்கின்றனர். அந் நாட்டின் கிழக்குப் பகுதியில் பெருமளவில் மரங்கள் தறிக்கப்படுகின்றன. இரண்டு மணி நேரத்திற்குள் 110 லொறிகள் மரங்களை தீபேத்தில் இருந்து மத்திய சீனாவுக்கு ஏற்றிச் சென்றதை தான் கணக்கிட்டதாக ஓர் உல்லாசப் பிரயாணி கூறியுள்ளார்.

மக்களை பாதுகாக்கவும் சிறிதளவே செய்யப்படுகின்றது. 500 பேரைக் கொண்ட கிழக்கு தீபேத்கிராமம் ஒன்றில் கடந்த மூன்று ஆண்டுகளில் காய்ச்சலினாலும், வயிற்றோட்டத்தினாலும் சுமார் 35 பேர் இறந்துள்ளனர். அருகில் உள்ள சுரங்கமொன்றின் கழிவினால் தண்ணீர் விநியோகத்துக்குள் நச்சுக் கழிவு புகுந்ததே இதற்கான காரணம் எனக் கருதப்பட்டது. அங்கு என்ன தோண்டப்படுகிறது என்பது எவருக்கும்தெரியாது. யுரேனியம் தோண்டப்படுவதாகவே நம்பப்படுகிறது. பாதுகாப்பு உடைகள் அணிந்தே சீனத் தொழிலாளர் அங்கு வேலை செய்கின்றனர்.

1990ஆம் ஆண்டில் இராணுவச்சட்டம் முடிவுக்குகொண்டு வரப்பட்டதை அடுத்து லாஸாவில் பொலிஸ் யுக்திகள் சீரமைக்கப்பட்டன. வீதிகளில் ஆயுதம் தரித்த பொலிஸாரின் நடமாட்டம் குறைக்கப்பட்டது. கேந்திர நிலைகளை கண்காணிக்க விரைந்து செயற்படும் அணிகள் அமைக்கப்பட்டன. தீவிர தகவல் திரட்டலுக்கு ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. 1992ஆம் ஆண்டு நவம்பரில் லாஸாவின் தீபேத்தியர் வாழும் பகுதியிலுள்ள முக்கிய விகாரைகளிலும் வீதிகளிலும் கண்காணிப்பு கமராக்கள் அதிகாரிகளினால் பொருத்தப்பட்டன.

தென்மேற்கு சீனாவுக்கான இராணுவத் தலைமை அகத்தின் ஒரு பகுதி தீபேத்துக்கு நகர்த்தப்படுமென்ற தகவல்களும் உள்ளன. தீபேத்திய பிரிவினைவாதிகளைக்கையாளவா அல்லது இந்தியாவுடனான எல்லையில் உள்ள நீண்டகால பாதுகாப்பு தொடர்பான சீனாவின் கவலையைப் பிரதிபலிக்கும் நடவடிக்கையா? என்பது குறித்து அவதானிகள்மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

தீபேத்தின் கலை, கலாசாரம் அடையாளம் தெரியாத அளவுக்கு அழிக்கப்படும் வரை படைபலத்தினாலும் லஞ்சத்தினாலும் தீபேத்தை சீனா மாற்றியமைத்து வருகின்றது.

(இண்டர்கோபிரஸ்)

## அஞ்ச வேண்டிய சூழல் எவருக்கும் இல்லை

எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு பதில் ஜனாதிபதி உத்தரவாதம் அளித்துள்ளார். எனவே எவரும் அச்சமடைய வேண்டியதில்லை என்று ராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி கூறியுள்ளார். கொழும்பில் அவர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் மேலும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மறைவையடுத்து எழுந்துள்ள பதற்ற நிலையை ஒருசில சமூகவிரோத சக்திகள் சாதகமாக்கிக்கொண்டு வீண் பீதி கிளப்பி வருவதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மக்கள் எவ்வித அச்சமும் பீதியும் கொள்ளத் தேவையில்லை என்றும், இப் பிரச்சினை தொடர்பாக பதில் ஜனாதிபதி உறுதிமொழி அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## வெசாக் தினத்தில் மதச் சடங்குகள்

இம்முறை வெசாக் கொண்டாட்டங்களின் போது சில அனுட்டானம், தியானம், தம்ம போதனை போன்றவையே முக்கிய இடம்பெறும் எனவும், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவையடுத்த சோகம் வெசாக் கொண்டாட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது எனவும் கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

ஆண்டு நிறைவும்

## பம்பாய் குண்டுவெடிப்புடன் பாக். தொடர்பு உண்டு

### இந்திய அரசு வலியுறுத்தல்

[டில்லி]

பம்பாய் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருப்பது தெளிவாகவும், மறுக்க முடியாமலும் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் கடந்த திங்கட்கிழமைமீண்டும் வலியுறுத்தினார்.

சென்ற 21ஆம் திகதியன்று லோக்சபாவில் தான் விடுத்த அறிக்கையை இன்னமும் உள்துறை அமைச்சர் பற்றிநிற்பதாக புதுடில்லியில்வெளியிடப்பட்ட அரச செய்திக் குறிப்பு ஒன்றில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## மணிப்பூருக்கு இராணுவம் மாநில அரசு அழைப்பு

(டில்லி)

இடம்பெற்ற அரசியற் கொலைகளுக்கு விடுதலைப் புலிகள் மீதும் குற்றம் சாட்டப்படுவதுண்டு. இதே வேளை தென்னிலங்கையில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு பிரேமதாசாவே பொறுப்பு என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. ஆனால் ஜனாதிபதிபிரேமதாசாவோசகலதிற்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பு எனக் குற்றம் சாட்டினார்.

ஆனால் லலித் அத்துலத் முதலி கொல்லப் பட்டபோது சிறிலங்கா ஜனாதிபதியே அதற்கு முழுப் பொறுப்பு என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியபோது பிரேமதாசா விசனத்தின் எல்லைக்கே சென்றார். அவர் ''எதிர்க் கட்சியினர் என்னை இரு கொலைகளில் மட்டுமே சம்பந்தப்படுத்தாமல் விட்டுவிட்டனர். ஒன்று மகாத்மா காந்தியின் கொலை. மற்றையது அண்மையில் தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கிறிஸ் ஹானியின் கொலை'' எனக் குறிப்பிட்டார்.

ஆனால் இன்று பிரேமதாசாவும் கொல்லப் பட்ட நிலையில், அவரது கொலையும் சேர்ந்து விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதாவது குற்றம் சுமத்துவதற்கு தற்பொழுது விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எவரும் சிறிலங்காவில் கிடைக்கவில்லை. ஆகையினால் போதிய தடயங்கள் இன்றியே புலிகளே செய்தார்கள் எனப் பொலிஸார் அறிவித்து விட்டனர்.

ஜனாதிபதியின் அந்தரங்க பாதுகாப்பு ஆலோசகருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த ஓர் இளைஞனே தற்கொலை வீரனாகப் பிரேமதாசாவைக் கொன்ற, குண்டை வெடிக்க வைத்ததாக விசாரணைகள் குறிப்பிடுகின்றன. ஆனால் இத்தற்கொலை வீரன் கழுத்தில் சயனைட் குப்பியின் சிதைவுகள் இருந்தமையினால் இவன் விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவன் என்பதே சிறிலங்காப் பொலிஸாரின் கணிப்பாகும்.

அதாவது கெடுபிடிப் போர்க் காலத்தில் நிகழ்ந்தது போல் எடுத்ததற்கும் எதிரணியினரைக் குற்றம் சாட்டுவது போன்றதே இதுவாகும். லலித்தின் கொலை குறித்தும் பொலிஸார் இவ்வாறே தெரிவித்தனர். இதில் விசாரணை என்பதும் தடயங்கள் என்பதும் இரண்டாம் பட்சமே. இந்நிலையானது ஒரு போதும் விசாரணையை சிறப்பான முறையில் மேற்கொள்ள உதவப் போவதில்லை. மாறாக, மேலும் வன்முறைகளையும், இரத்தக் களரியையும் ஏற்படுத்தவே வழிவகுக்கும். கொழும்பில் தற்பொழுது எழுந்துள்ள பதற்ற நிலையும் இதன் வெளிப்பாடே ஆகும்.

சிறிலங்காவின் தலைநகரில் பல அரசியல் கொலைகள் அண்மையில் இடம்பெற்று விட்டன. இவற்றிற்கான காரணங்களை அரசு இன்றும் வெளியிடவில்லை. இந்நிலையில் கொலைக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிவது எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று கொலைக்கான காரணங்களும் கண்டறியப்பட வேண்டும். அவ்வாறு கண்டறியப்படாமலும், அதற்குப் பரிகாரம் காணப்படாமலும், கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனவும், அவர்களை அழித்தொழிப்பதன் மூலம் இதனைத் தடுத்து விட முடியும் என எண்ணுவதும், செயற்படுவதும் ஒரு போதும் பிரச்சினைக்குத் தீர்வாகப் போவதில்லை ஏனெனில் காரணங்கள் இருக்கும் வரை காரியங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது.

---

வருகின்றது. சீன ஆட்சிக்கு ஒரு முடிவு அஞ்ஞாத வாசம் மேற்கொண்டுள்ள திபேத்திய தலைவர் தலாய்லாமா நாட்

தெற்கு. மேற்கு பிராந்தியங்களில் 200 மேற்பட்ட யுரேனியம் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்

தொழில் தேர்ச்சி பெற்றவர்கள் உள்ளூர் சிறு வியாபாரங்களைக் கூட ஊக்குவிப்பதில்லை. சீனாவில் இருந்து

வேலை செய்கின்றனர்.

1990ஆம் ஆண்டில் இராணுவச்சட்டம் முடிவுக்குகொண்டு

சத்தினாலும் திபேத்தை சீனா மாற்றியமைத்து வருகின்றது.

(இன்டர்கோபிரஸ்)

---

## அஞ்ச வேண்டிய சூழல் எவருக்கும் இல்லை

எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு பதில் ஜனாதிபதி உத்தரவாதம் அளித்துள்ளார். எனவே எவரும் அச்சமடைய வேண்டியதில்லை என்று ராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி கூறியுள்ளார். கொழும்பில் அவர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் மேலும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மறைவையடுத்து எழுந்துள்ள பதற்ற நிலையை ஒருசில சமூகவிரோத சக்திகள் சாதகமாக்கிக்கொண்டு வீண் பீதி கிளப்பி வருவதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மக்கள் எவ்வித அச்சமும் பீதியும் கொள்ளத் தேவையில்லை என்றும், இப் பிரச்சினை தொடர்பாக பதில் ஜானாதிபதி உறுதிமொழி அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## அரிசி இறக்குமதிக்கு முற்றாகத் தடை

அரிசி, மிளகாய், வெங்காயம், சோளம் ஆகியவற்றின் இறக்குமதியை முற்றாகத் தடைசெய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அடுத்த ஆண்டிலிருந்து இந்தப் பண்டங்களின் இறக்குமதி முற்றாகத் தடை செய்யப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இந்தப் பண்டங்களின் இறக்குமதி இந்த ஆண்டிலிருந்து படிப்படியாகக் குறைக்கப் படும் என்றும் அவர் தெரிவித்தார் இறக்குமதித் தடையால் உள்ளூர் உற்பத்தி அதிகரிப்பதோடு அந்நியச் செலாவணி மீதமும் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மே 30முதல்

## குடியிருப்புகள் அனைத்தும் தொழிலாளருக்கு சொந்தம்

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த அனைத்து தோட்டத்தொழிலாளர்களின் குடியிருப்புக்களும் தோட்ட தொழிலாளர்களுக்கு சொந்தமாக்கப்படவுள்ளது.

இக் குடியிருப்புக்கள் ஒவ்வொரு குடியிருப்பாளர்களின் குடும்பத் தலைவரின் பெயரில் சொந்தமாக்கப்படுமென தெரியவருகின்றது.

இதற்கான சுற்று நிருபமொன்றை இ.தொ.கா உப தலைவர் ஏ. எம் டி.ராஜன் தோட்டத் தலைவர்களுக்கு அறிவித்திருக்கின்றார்.

இ. தொ. கா தலைவர்.எஸ் தொண்டமான் நீண்டகாலமாக சிறிலங்கா அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இம்முடிவை அரசு வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

## பிரேமா தயாரித்திருந்த வெசாக் தினச் செய்தி

பிறந்தவர்கள் அனைவரும் இறப்பது நிச்சயம். புத்தபகவானின் சானதனா உயரிய மொழி இது இவ்வாறுகாலஞ் சென்ற ஜனாதிபதி வெளியிட உத்தேசித்திருந்த வெசாக்தினச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்ததாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## கிளாலிக் கரைநோக்கி கடற்படை தாக்கு

(தென்மராட்சி)

கிளாலிக் கடல் பரப்பில் இருந்து கடற்படையினர் நேற்றுமுன்தினம் காலை 8.00 மணியளவில் கரையை நோக்கி அகோர பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். இதே வேளை அன்று அதிகாலை 5 மணியளவில் கறுக்காய்த்தீவு பகுதிகளில் கடும் துப்பாக்கி வேட்டுக்களும் கேட்ட வண்ணம் இருந்ததாக தெரியவருகின்றது. எனினும் சேதவிபரம் தெரியவில்லை. (86)

## வெசாக் தினத்தில் மதச் சடங்குகள்

இம்முறை வெசாக் கொண்டாட்டங்களின் போது சில அனுட்டானம், தியானம், தம்ம போதனை போன்றவையே முக்கிய இடம்பெறும் எனவும், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவையடுத்த சோகம் வெசாக் கொண்டாட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது எனவும் கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

## ஆண்டு நிறைவும் மலர் வெளியீடும்

(தென்மராட்சி)

கிளி / பளை மகாவித்தியாலய சாரணர் குழு 12வது ஆண்டுநிறைவு விழாவும் மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அரங்கில் பாடசாலை அதிபர் திரு. சு. புண்ணியசீலன் தலைமையில்இடம் பெறும்.

முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர்- திரு. கந்தசாமி, கௌரவ விருந்தினராக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், சிறப்பு விருந்தினராக மாவட்ட சாரண ஆணையாளர் கிளிநொச்சி. திரு. க. கோபாலகிருஷ்ணன், திரு. பொன் சபாபதி (பிரதிக் கல்விப்பணிப்பாளர் கிளிநொச்சி) திரு. க. ஐயாத்துரை (உதவி அரசாங்க அதிபர் பளை) திரு நாவண்ணன் (தமிழீழ கல்விக்கழகம்) திரு. இன்பன் (தமிழீழ மாணவர் அமைப்பு) திரு. கந்தண்ணா (தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்) திரு. அன்பு (பளைவட்டப்பொறுப்பாளர்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (86)

## எல்லேயில் முதலிடம்

(மானிப்பாய்)

நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ''எல்லே'' விளையாட்டுப் போட்டியில் நல்லூர் நொதேர்ண் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், கலாமன்ற விளையாட்டுக்கழகத்தினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் இவ் விளையாட்டுக்கள் இடம் பெற்றது. [7]

## பம்பாய் குண்டுவெடிப்புடன் பாக். தொடர்பு உண்டு

### இந்திய அரசு வலியுறுத்தல்

[டில்லி]

பம்பாய் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருப்பது தெளிவாகவும், மறுக்க முடியாமலும் கண்டு பிடிக்கப் பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் கடந்த திங்கட்கிழமைமீண்டும் வலியுறுத்தினார்.

சென்ற 21ஆம் திகதியன்று லோக்சபாவில் தான் விடுத்த அறிக்கையை இன்னமும் உள்துறை அமைச்சர் பற்றிநிற்பதாக புதுடில்லியில்வெளியிடப்பட்ட அரச செய்திக் குறிப்பு ஒன்றில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## மணிப்பூருக்கு இராணுவம் மாநில அரசு அழைப்பு

(டில்லி)

மணிப்பூர் மாநிலத்தில் சட்டம்ஒழுங்கைப் பாதுகாப்பதில் சிவில் நிர்வாகத்திற்கு உதவும் வகையில் இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. இம்பால் நகரில் நேற்று முன்தினம் முதல் இராணுவத்தினர் ரோந்து சுற்றும் பணியை ஆரம்பித்திருப்பதாகவும், பதற்றத் திற்கு உள்ளாகக்கூடிய இடங்களில் இராணுவ ரோந்துகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் மாநில முதல்வர் திரேந்திர சிங் ஆகாசவாணி நிருபரிடம் பேசுகையில் கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடந்த கலவரங்களில் கொலையுண்டவர்களின் குடும்பத்தினருக்கு தலா இருபதாயிரம் ரூபாவும், காயமுற்றவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்பட இருப்பதாக. முதல்வர் மேலும் கூறியுள்ளார்.

## கிளைடர் விமானம் பற்றி தீவிர விசாரணை வேண்டும்

[சென்னை]

தமிழக முதல்வரின் இல்லத்திற்கு மேலே நேற்று முன்தினம் இரவு பறந்ததாகக் கூறப்படும் கிளைடர் ரகவிமானம் பற்றித் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று தமிழ்நாடு மாநில கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் ஆர். நல்லகண்ணு கோரியுள்ளார். சென்னையில் நேற்று அவர் விடுத்த அறிக்கையில், தமிழக முதல்வரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் அமெரிக்க அதிபர் புஷ்ஷைக் கொல்லச் சதி?

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தனது நாட்டிற்கு விஜயம் செய்திருந்தபோது அவரைக் கொல்ல ஈராக் ஏஜெண்டுகள் திட்டமிட்டதாகக் குவைத் தெரிவித்துள்ளது.

இதற்கென வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட கார் ஒன்று 17 பேரடங்கிய குழு ஒன்றிடம் இருந்ததாகக் குவைத் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் அமெரிக்க இரகசியப் பொலிசாரும், குவைத் பாதுகாப்பு வீரர்களும் புஷ் இன் விஜயம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதில் தீவிரமாகச் செயற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

குண்டு வைக்கப்பட்ட கார் மூலம் அல்லது குண்டைக் கட்டிக் கொண்டு தற்கொலைக்குத் தயாராக இருக்கும் ஒருவர். மூலம் புஷ்ஷைக் கொல்ல இக்குழுக்கள் திட்டமிட்டு இருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இக்குழுவினர் பல பகுதிகளில் குண்டை வைத்து நாட்டைக் குழப்பவும், புஷ்ஷைக் கொல்லவும் திட்டமிட்டிருந்தனர், ஆனால் புஷ் வருவதற்கு முன்னதாக இக் குழுவின் 14 அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் அவ் அமைச்சர் தெரிவித்தார்.

இக்கொலை முயற்சி தொடர்பாக அமெரிக்கா விசாரணை மேற்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

---

## கனடாவில் ஆரம்பம்

யாழ்/ மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் கனடாவில் ரொறொன்றோ பிறிடில் ரவுண் கிறிஸ்தவ ஆலய மண்டபத்தில் கூடி யாழ்/மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ரொறொன்ரோகிளையை அங்குரார்ப்பணம் செய்தனர்.

ஈழநாதம்

## பரீட்சை ஒத்திவைப்பு

நாளை 7ஆம் திகதி நடைபெறவிருந்த தொழில் நுட்பக் கல்லூரி இறுதித் தேர்வு நாளை மறுதினம் 8ஆம்திகதி சனிக்கிழமை அன்றே நடைபெறும் என தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார் பரீட்சை ஒத்திவைப்பு குறித்து பரீட்சை ஆணையாளர் அதிபருக்கு நேற்று அறிவித்தார்.

## 'சாளரம்' வெளிவந்தது

சாளரம் மே-ஜூன் மாத இதழ் வெளிவந்துள்ளது. இயலிசை வாரிதி ந. வீரமணி ஐயருடன் சந்திப்பு, தமிழீழ விடுதலைப் போராட்டமும் வீடியோ திரைப்படங்களும், குழந்தையும் முதலாண்டு உணவும், வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை, சிறுகதை ஆகியவை உட்பட பல அம்சங்களை இந்த இதழ் தாங்கி வந்துள்ளது.

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வங்கிகளில் எழுதுவினைஞர் பதவியில் இருந்து அலுவலக உத்தியோகத்தர் பதவிக்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் ஏற்கனவே இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## விருது

இணுவில் மேற்கு ஶ்ரீ செகராச சேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு "மகாபாரதம்" தொடர் சொற்பொழிவு ஆற்றிய கொக்குவில் குமாரசாமி சண்முகநாதன் அவர்கட்கு மேற்படி தேவஸ்தானம்இன்று "மெய்ஞ் ஞானசாகரம்" என்ற விருதினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

பாராட்டும் வாழ்த்தும்

# ராஜீவ் கொலை வழக்கு மே - 12வரை ஒத்திவைப்பு

(சென்னை)

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு நேற்றுஆரம்பமானது. சென்னை அருகே பூந்தமல்லி நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்புடன் ஆரம்பித்த விசாரணையில் அரச தரப்பு வழக்கறிஞர் வழக்கின் விபரங்களை நீதிபதிக்கு விபரித்தார்.

விசாரணையின்போது வழக்கில் சம்பந்தப்பட்ட 26 பேரும் ஆஜராகியிருந்தனர். விசேட நீதிமன்ற நீதிபதி சித்திக் வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டபின் விசாரணையை இம்மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

ராஜீவ் கொலையில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் 9 பேர் தமது சார்பில் வாதிட இன்னமும் வழக்கறிஞரை அமர்த்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தமது வழக்கறிஞரை அமர்த்தும் வரை வழக்கை விசாரணைக்கு எடுக்கக்கூடாது எனக் கோரியுள்ளனர் எனவும், எனினும் வழக்கறிஞர்களை அமர்த்திய சந்தேகநபர்கள் மீதான விசாரணையை முதலில் நீதிமன்றம் விசாரணைக்கு எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களின் சார்பில் வழக்கறிஞர் ஒருவர் எதிர்வரும் 12ஆம் திகதி நீதிமன்றில வாதிடவுள்ளார் எனவும் அதேபோன்று முக்கிய சந்தேக நபர்களாக கூறப்படும் நளினி மற்றும் அவரின் தாயார், சகோதரன் ஆகியோரின் சார்பாக எதிர்வரும் 19ஆம் திகதி வழக்கறிஞர் ஒருவர் தனது வாதங்களை நீதிமன்றில் முன்வைக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாளை திறப்பு

வேலணை துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அரசடி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட இடத்தில் திறந்து வைக்கப்படுகிறது. தீவகத் தளபதி திரு. வில்லவன் வைபவரீதியாகத் திறந்துவைக்கிறார்.

## பொலிசாரிடம் சரணடைய வீரப்பன் தயாராம்

(சென்னை)

சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் தாம் பொலிசாரிடம் சரணடையத் தயார் என தெரிவித்துள்ளதாக சென்னையிலிருந்து வெளிவரும் நக்கீரன் எனும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமக்கு குறைவான தண்டனையை அரசு தர சம்மதித்தால், சிறையில் பொலிசார் முறையாக நடந்துகொள்ள முன்வந்தால் தாம் சரணடையத் தயார் என வீரப்பன் கூறியுள்ளதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

நக்கீரன் தெரிவிப்பு

## தலைவர் பதவியிலிருந்து வி. பி. சிங் ராஜினாமா

[டில்லி]

வி.பி.சிங் ஜனதாதளக் கட்சிப் பாராளுமன்றத் தலைவர் பதவியிலிருந்து நேற்று இராஜினாமாச் செய்தார்.

உடல் நலக்குறைவு காரணமாகவே ஜனதா தளக் கட்சிப் பாராளுமன்றத் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததாக வி.பி சிங் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

இந்த முடிவைப் பற்றித் தான் லோக்சபைச் சபாநாயகருக்கு அறிவித்திருப்பதாக டில்லியில் பத்திரிகையாளருக்கு கூறிய அவர், மண்டேல் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் பின் தங்கிய சமூகங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகளுக்கு எட்ட மத்திய அரசு வழி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

## புதுடில்லியில் குண்டுவெடிப்பு நடத்த திட்டமாம்

பம்பாயில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகள் போன்று புதுடில்லியிலும் சில சக்திகள் குண்டு வெடிப்புகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக துப்புக் கிடைத்திருப்பதாக பம்பாய் பொலிசார் இந்திய உள்துறையமைச்சிற்கு தகவல் அளித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து நேற்று தலைநகர் டில்லியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## சபாநாயகர் உத்தரவிற்கு உயர் நீதிமன்றம் தடை

## தலைவர்கள் கொலைக்கு சுதந்திரக்கட்சி கண்டனம்

(கொழும்பு)

அரசியல் தலைவர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்றக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஜனநாயக நாட்டில் இவ்வாறு தலைவர்கள்கொல்லப்பட்டுள்ளமையானது ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள பேரபாயத்தை எடுத்துக் காட்டுவதாகவும் அக் கண்டனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமூக அபிவிருத்தீக் குழுக்கள்

(கொழுபபுத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சமூக அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படவிருக்கும்மானியங்களைச் உரியவர்களுக்கு வழங்குவதற்காகயாழ் மாநகர சபையுடன் இணைந்து செயற்படுவதற்காகவும் இக்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மிக வறுமைக் கோட்டில் வாழுகின்ற சொந்தக்காணிகளுள். வீட்டினை அமைத்துக்கொள்ள வசதியற்றவர்களிடமிருந்து இக்குழுக்கள் மூலம் சேகரிக்கப்படும விண்ணப்பங்களின் பரிசீலனையின் பின்னர் இம்மானியம் வழங்கப்படவுள்ளது. 1993ஆம் ஆண்டுக்கான முதல் கொடுப்பனவுகள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### அரசாங்க

தொழிலாளர்களுக்கு இத்தினத்தன்று விடுமுறை வழங்கும்படி தொழில் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### யாழ்—வன்னி

ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும்.

தொடர்புத் தகவல்களைக் கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களைச் சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கலாம்.

### சலுகை அடிப்படையிலான தகவல்கள்

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும் மரண அறிவித்தற் செய்திகளும் சலுகை அடிப்படையிலான தகவல்களாகக் கொள்ளப்படும். வைத்திய அதிகாரி அல்லதுகுறிப்பிட்டபிரதேசசிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராமசேவகரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும்

படும்.

### வழமையான தகவல்

மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படைத்தகவலிலும் வியாபாரத்தகவலிலும் உள்ளடங்காத மற்றைய எல்லாத் தகவல்களும் வழமையான தகவல்களாகக் கொள்ளப்படும்.

முதல் பத்து வரையிலான சொற்களுக்கு ரூபா 50ம், மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5ம் கட்டணமாக அறவிடப்படும்.

### விநியோக வகைகள்

#### சாதாரண விநியோகம்

தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணி நேர இடைவெளிக்குள் அவ்வப் பகுதிக்குத் தபால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில்கையளிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சாதாரண விநியோகத்திற்கே உரி

## மாவீரர் உருவப்படங்கள் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

31 மாவீரர்களின் போஸ்ரர் படங்கள் தமிழீழ மாவீரர் பணிமனையினரால் வெளியிடப்பட்டுள்ளன. இம் மாவீரர்களின் படங்களை சிறு அன்பளிப்பு செலுத்தி தமிழீழ மாவீரர் பணிமனையிலும், மாவீரர் பணிமனைகளிலும் மாவட்ட அரசியல்துறை செயலகங்களிலும்பெற்றுக்கொள்ளலாம்.

இவர்களின் விபரம் வருமாறு;

கரும்புலி கப்டன் கொலின்ஸ் (பர்ணாந்து சில்வெஸ்ரர்), மன்னார்.
கரும்புலி கப்டன் நாயகன் (சிவலிங்கம் கேசவன்), வல்வெட்டித்துறை.
கடற்புலி கப்டன் ஜீவா (நடராசா மார்க் ஜெயராஜ்), பாலையூர்.
2-ம் லெப் இளங்கதிர், (ஆறுமுகம் இரகுகுமார்), திருமலை,
மேஜர் வேலன் / மலரவன் (சுந்தரலிங்கம் சுந்தரவேல்), வியாபாரிமூலை.
வீரவேங்கை கில்பேட் (ஜோண்சிங்கம் செல்வராசா), திருமலை.
லெப். கேணல் குட்டிசிறி (இராசையா சிறீகணேசன்), மானிப்பாய்.
வீரவேங்கை பில்லா (வேலாயுத பிள்ளை கருணன்), முல்லைத்தீவு.
லெப் ஜெயம் / ரமணன் (இராசசேகரம் பிரேமச்சந்திரன்), வல்வெட்டித்துறை.
வீரவேங்கை ரமேஸ் (ஜெராட் யோகராசா), பண்டத்தரிப்பு.
வீரவேங்கை ஜோதி (பாலசிங்கம் றூபராசா), கிளிநொச்சி.
கடற்புலி லெப் அமுதன் (அலோசியஸ் ஜான்சன்), நாவாந்துறை.
கடற்புலி லெப். தூயவன் (மகாலிங்கம் ஜெயலிங்கம்). யாழ்.
கடற்புலி கப்டன் றொசான் (இரத்தினசிங்கம் அருணராசா), நல்லூர்-யாழ்.
கப்டன் ஜொனி (நாகநாதி ஜெகதீஸ்வரன்). சாவகச்சேரி.
வீரவேங்கை சாப்தீன் (சரவணமுத்து இராஜேந்திரன்). கிளிநொச்சி,
வீரவேங்கை குட்டி (கனகசபை கிருபாகரன்), பளை,
வீரவேங்கை செல்வம் (பிலிப்பு பெனடிக்ற்). மன்னார்.
கடற்புலி லெப். நல்லவன் (சிவஞானசுந்தரம் ரமேஸ்), கொழும்புத்துறை.
வீரவேங்கை கிருணா (குப்புசாமி மூர்த்தி), கிளிநொச்சி.
வீரவேங்கை வெள்ளை (இ. சற்குணநாதன்), முல்லைத்தீவு.
கேணல் கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்), வல்வெட்டித்துறை.
வீரவேங்கை கவி (யோகராசா சிவபாலன்), திருமலை.
வீரவேங்கை ஜீவராசா (சின்னையா நாதன்), முல்லைத்தீவு.
கடற்புலி கப்டன் குணசீலன் / குணராஜ் (சேகரன்குரூஸ் மைக்கல ஜீவா), கொழும்புத்துறை.
வீரவேங்கை கரன் (கணபதிப்பிள்ளை சிவசரணம்), கொடிகாமம்.
கப்டன் அலெக்ஸ் (கந்தசாமி நித்தியானந்தன்), நல்லூர்-யாழ்.
கரும்புலி மேஜர் டாம்போ (காசிப்பிள்ளை தயாபரன்), மன்னார்.
வீரவேங்கை கார்த்திக் (நடராசா கார்த்திகேசு), வல்வெட்டித்துறை.
வீரவேங்கை ரஞ்சன் (சரவணமுத்து சத்தியசீலன்), முல்லைத்தீவு.
வீரவேங்கை சங்கரி (செல்வமாணிக்கம் பாலசுந்தரம் பாலகணேஷ்), வல்வெட்டித்துறை.

யினர் பொறுப்பேற்க முடியாது என்பதுடன் குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தகவல் கையேற்கப்படுவதிலிருந்தும் மறுக்கப்படலாம்.

3. வன்னிப்பகுதி முகவரி இல்லாதவர்களின் வசதிக்காக (பயணிகள்) சோதனைநிலைய கருமபீடத்தையும் கிளிநொச்சி அலுவலகத்தையும் முகவரியாக அமைத்துத் தகவலை அனுப்பலாம். உரியவர்

பெற்றுக்கொள்ளப்படும்.

8. தகவலைக் கொடுப்போர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை அல்லது வடபகுதிக்கு வெளியே செல்லும் அனுமதி அட்டையையோ காட்டித் தன் அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் யாவரும் இச்சேவையினைப் பயன்படுத்திப் பயன்பெறும் நோக்குடன் இச்

நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் ஏற்கனவே இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## விருது

இணுவில் மேற்கு ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ''மகாபாரதம்'' தொடர் சொற்பொழிவு ஆற்றிய கொக்குவில் குமாரசாமி சண்முகநாதன் அவர்கட்கு மேற்படி தேவஸ்தானம்இன்று ''மெய்ஞ் ஞானசாகரம்'' என்ற விருதினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

## பாராட்டும் வாழ்த்தும்

பதில் ஜனாதிபதியாகப் பொறுப் பற்று இருக்கும் டி.பி. விஜயதுங்கவிற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடியபோது அவரைச் சந்தித்த எதிர்க்கட்சியினர் அவருக்குக் கைலாகு கொடுத்து வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

## புதிய அமைச்சரவை அமையும்

(கொழும்பு)

அடுத்த வாரத்தில் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதும் அவர், பிரதமர் உட்படப் புதிய அமைச்சரவையை அமைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதும் தற்போதைய அமைச்சரவை பதவி இழக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

...சிப் பாராளுமன்றத் தலைவர் பதவியிலிருந்து நேற்று இராஜினாமாச் செய்தார்.

உடல் நலக்குறைவு காரணமாகவே ஜனதா தளக் கட்சிப் பாராளுமன்றத் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததாக வி.பி சிங் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

...அறிவித்திருப்பதாக டில்லியில் பத்திரிகையாளருக்கு கூறிய அவர், மண்டேல் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகளுக்கு எட்ட மத்திய அரசு வழி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

## புதுடில்லியில் குண்டுவெடிப்பு நடத்த திட்டமாம்

பம்பாயில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகள் போன்று புதுடில்லியிலும் சில சக்திகள் குண்டு வெடிப்புகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக துப்புக் கிடைத்திருப்பதாக பம்பாய் பொலிசார் இந்திய உள்துறையமைச்சிற்கு தகவல் அளித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து நேற்று தலைநகர் டில்லியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## சபாநாயகர் உத்தரவிற்கு உயர் நீதிமன்றம் தடை

(சென்னை)

தி.மு.க. மேடைப் பேச்சாளர் வெற்றிகொண்டான் என்பவரை கைது செய்யுமாறு சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா விடுத்த கைது உத்தரவிற்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலதடையை நேற்று பிறப்பித்தது.

சட்டப்பேரவை தலைவர் மற்றும் பேரவை பெண் உறுப்பினர்களை வெற்றிகொண்டான் பொது மேடைகளில் இழிவாக பேசிவந்ததை சபையில் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதையடுத்தே அவரை கைதுசெய்யும்படி சேடப்பட்டி முத்தையா கைது உத்தரவை பிறப்பித்திருந்தார். இதை ஆட்சேபித்து வெற்றிகொண்டான் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

## பல்லாயிரக்

இதேவேளை கொழும்பின் பல பகுதிகளிலும் தமிழர் பெரும் பதற்றம் அடைந்து காணப்படுவதாகவும், பீதியுற்றிருப்பதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## ஜம்முவில் குண்டு வெடிப்பு

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற இரண்டு வெவ்வேறு குண்டுவெடிப்புசம்பவங்களில் முப்பத்தாறுபேர் காயமடைந்து இருக்கின்றனர் முதலாவது குண்டு பஸ் நிலையம் ஒன்றின் அருகிலும், மற்றது திரைப்பட மாளிகை ஒன்றிலும் வெடித்துள்ளது.

## இலங்கை

சீர்செய்வதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும்.

தொடர்புத் தகவல்களைக் கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களைச் சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கலாம்.

### சலுகை அடிப்படையிலான தகவல்கள்

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும் மரண அறிவித்தற் செய்திகளும் சலுகை அடிப்படையிலான தகவல்களாகக் கொள்ளப்படும். வைத்திய அதிகாரி அல்லதுகுறிப்பிட்டபிரதேசசிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராமசேவகரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும் செய்திகள் மாத்திரமே மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படையிலான தகவல்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

15க்கு மேற்படாத சொற்களுக்கு ரூபா 15-ம். மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2/-ம்அறவிடப்படும்.

குறிப்பு:

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும், மரண அறிவித்தல் செய்திகளையே சாதாரண தகவல்களாக ஏற்றுக்கொள்வதாக இருப்பினும் மேற்குறிப்பிட்டுள்ளோரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் பெற்றிருக்க வேண்டும்.

### வியாபாரத் தகவல்

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்கள் இக் குறிப்பிட்ட வகையில் அடங்கும்.

முதல் பத்துச் சொற்களுக்கும் ரூபா100-ம், மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15-ம் கட்டணமாக அறிவிடப்

### வழமையான தகவல்

மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படைத்தகவலிலும் வியாபாரத்தகவலிலும் உள்ளடங்காத மற்றைய எல்லாத் தகவல்களும் வழமையான தகவல்களாகக் கொள்ளப்படும்.

முதல் பத்து வரையிலான சொற்களுக்கு ரூபா 50ம், மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5ம் கட்டணமாக அறவிடப்படும்.

### விநியோக வகைகள்

#### சாதாரண விநியோகம்

தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணி நேர இடைவெளிக்குள் அவ்வப் பகுதிக்குத் தபால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில்கையளிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சாதாரண விநியோகத்திற்கே உரியனவாகும்

#### விரைவு விநியோகம்

இது தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணி நேர இடைவெளியில் தபால் ஊழியரின் ஒத்துழைப்புடன் 'நேரடியாக' விநியோகிக்கப்படும். விரைவு விநியோகத்திற்காகச் சாதாரண கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

குறிப்பு:

1. வன்னிப்பகுதி விநியோகங்கள் கண்டி வீதியை மையமாக வைத்தே விநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்திலிருந்து 3 மைல்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதிகளுக்கும் குஞ்சுப்பரந்தன் இறங்கதுறைப் பகுதிக்கும் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும்.
2. தெளிவில்லாதமுகவரிகள், தகவல் விபரங்கள் என்பனவற்றால் ஏற்படும் தாமதங்கள், விளக்கமின்மை என்பனவற்றுக்காக விநியோக சேவையினர் பொறுப்பேற்க முடியாது என்பதுடன் குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தகவல் கையேற்கப்படுவதிலிருந்தும் மறுக்கப்படலாம்.
3. வன்னிப்பகுதி முகவரி இல்லாதவர்களின் வசதிக்காக (பயணிகள்) சோதனைநிலைய கருமபீடத்தையும் கிளிநொச்சி அலுவலகத்தையும் முகவரியாக அமைத்துத் தகவலை அனுப்பலாம். உரியவர் தன்னை உரிய ஆவணத்தினூடாக அடையாளம் காட்டிக் கோரும் பட்சத்தில் தகவல் வழங்கப்படும்.
4. கட்டணங்கள் யாவும் பணமாகவே செலுத்தப்பட வேண்டும்.
5- விரைவு விநியோகத்திற்காகத் தகவல்களை ஒப்படைப்பவர்கள் தாம் விரும்பினால் பதில் தகவல்களுக்கான கட்டணத்தையும் செலுத்தினால் தகவலை உரியவரிடம் ஒப்படைக்கும்போதே பதில் தகவல் பெற்றுஅனுப்பப்படும்.
6. தகவல் விநியோகப் படிவத்தினை ரூபா 1கொடுத்துப் பரவலாக எல்லா இடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
7. எல்லாத் தகவல்களும் தமிழ்மொழியில் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.
8. தகவலைக் கொடுப்போர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை அல்லது வடபகுதிக்கு வெளியே செல்லும் அனுமதி அட்டையையோ காட்டித் தன் அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் யாவரும் இச் சேவையினைப் பயன்படுத்திப் பயன்பெறும் நோக்குடன் இச் செய்தியைப் போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு அறியத் தருகின்றது

காமம்.

கப்டன் அலெக்ஸ் (கந்தசாமி நித்தியானந்தன்), நல்லூர்-யாழ்.

கரும்புலி மேஜர் டாம்போ (காசிப்பிள்ளை தயாபரன்), மன்னார்.

வீரவேங்கை கார்த்திக் (நடராசா கார்த்திகேசு), வல்வெட்டித்துறை.

வீரவேங்கை ரஞ்சன் (சரவணமுத்து சத்தியசீலன்), முல்லைத்தீவு.

வீரவேங்கை சங்கரி (செல்வமாணிக்கம் பாலசுந்தரம் பாலகணேஷ்), வல்வெட்டித்துறை.

## மாத்தறை

தெரிவிக்கப்படுகிறது.

கம்புறுபிட்டியபிரதேசசபை எதிர்கட்சித்தலைவர் பியதுறு பிரதேசசபை உதவித் தலைவர் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இனந்தெரியாத சிலர் இரவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வீடுகளில் வெள்ளைக் கொடிகளைக்கட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் பிரேமதாசாவின் மறைவையடுத்து பட்டாசு கொளுத்தியவர்கள் என சந்தேகிக்கப்படுவோர் பொலிசாரினால் கைது செய்யப்படுவதாகவும், பலர் பயமுறுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


மன்ற அரங்கில்!

மூன்று நாட்கள்!

திருமறைக் கலா மன்றம்

நடாத்தும்

"நாட்டுக் கூத்து விழா"

காலம்:
7-5-93 வெள்ளி
8-5-93 சனி
9-5-93 ஞாயிறு
பிரவேசம் இலவசம்

★ வடமோடி ★ தென்மோடி
★ மன்னார் பாங்கு
★ முல்லைத்தீவுபாங்கு ★ சிந்துநடை

அனைத்தையும் ஒரே மேடையில் கண்டுகளியுங்கள்

தினமும் மாலை 6-45 மணி
ஆசனப் பதிவு உண்டு

(சி6571)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 4-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9295

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
28-9259, 26-0763, 28-0159, 26-7307, 26-9145
24-8212, 26-3937, 27-9090, 26-2414, 42-3339
26-8917, 28-6640, 24-4885.

### 5-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9301

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
26-4376, 26-6527, 27-4070, 26-6062, 26-8600
27-9052, 24-3071, 26-5244, 26-9611, 26-9201
27-7653, 24-9645, 22-3611.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-3528, 41-4176, 24-5092, 28-3289, 24-8484
24-0922, 24-8429, 26-0986, 28-5294, 42-2862
71-4489, 26-1658.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 06 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.